தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

வ.எண்	நேரம்	இடம்
1.	காலை 9.30	கன்னிவாடி
2.	காலை 10.15	வடுகபட்டி
3.	காலை 11.00	கணபதிபாளையம்
4.	காலை 11.45	தளவாய்பட்டணம்
	மதிய உணவு இடைவேளை	
வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 3.30	பெரியார் சிலை
2.	மாலை 4.15	அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு)
3.	மாலை 5.00	பூவாடி ரோடு கார்னர்

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தென்னிந்திய திருச்சபை மற்றும் திருச்சி தஞ்சாவூர் திருமண்டலம், தாராபுரம் எல்லீஸ் நினைவு ஆலயத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், திருச்சி மேயர் மு.அன்பழகன், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ரகு, முன்னாள் எம்பி ஞானதிரவியம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, தாராபுரம் நகர செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர் மன்ற உறுப்பினர் கு.பாப்புகண்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையடுத்து

ஆர்.டி.ஐ.யில் சட்டம் ஒழுங்குக்கு விலக்கு அளித்ததை திரும்பப் பெற்றது த.வெ.க. அரசு!

சென்னை,செப்.28- சட்டம் ஒழுங்கு தொடர்பான தகவல்களை பெறுவதில் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது என்று அரசு தெரிவித்து இருந்தது.

ஆர்.டி.ஐ. சட்டத்தில் இருந்து பொது துறையிலுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவுக்கு விலக்கு அளித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது. அந்த அரசாணையில், பொது துறையின் கீழுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான தகவல்களை பெறுவதில் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. உளவு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் அமைப்பாக அறிவித்து இந்த விலக்கு அளிக்கப்படுகிறது.

இதனால், சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான விசாரணை ஆணையம் தொடர்பான நியமனங்கள், வகுப்புவாத, சாதிய மோதல்கள், காவல் துறையின் கைது நடவடிக்கைகள், போலீஸ் காவல், கைதிகளின் மரணம், போலீஸ் விசாரணை அறிக்கைகள் பெறுவதிலும் கட்டுப்பாடு விதிக்கப்படும். சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான மாதாந்திர சீராய்வு கூட்டம், தலைமை செயலாளர் அறிவுறுத்தலின் பேரிலான சிறப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டங்கள் உள்ளிட்ட விவரங்களை பெறுவதிலும் இந்த கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும்.

இதன்படி, மக்களவை மற்றும் மாநிலங்களவைகளில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள், மாணவர், விவசாயி மற்றும் அரசியல் கட்சியினர் உள்ளிட்டோரின் போராட்டம், அவதூறு கட்டுரைகள், செய்தி துணுக்குகள், பேச்சுகள் உள்ளிட்ட விசயங்கள் தொடர்பான தகவல்களையும் பெற முடியாது.

சட்டம் மற்றும் ஒழுங்கு விசயத்தில், அனைத்து தகவல்களையும் மக்களுக்கு வழங்க முடியாது என தெரிவித்து, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான விசயத்தில், இந்த முக்கிய முடிவை தமிழக அரசு எடுத்தது. ஆர்.டி.ஐ.யில் சட்டம் ஒழுங்குக்கு விலக்கு அளித்ததற்கு தவெக கூட்டணியில் உள்ள விசிக, கம்யூனிஸ்டு மற்றும் பிற கட்சிகளான திமுக, பாமக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்தன.

வாபஸ்

இந்த நிலையில், பல வேறு தரப்பில் எதிர்ப்புகள் எழுந்த நிலையில் சட்டம் ஒழுங்கு தொடர்பான சில தகவல்கள் இனி ஆர்.டி.ஐ. சட்டத்தின் கீழ் வழங்கப்படாது என்று வெளியிடப்பட்ட அரசாணையை தமிழ்நாடு அரசு திரும்பப்பெற்றது.

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



இன்று : 28.09.2026 (திங்கட்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய/நகர/பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 5.00	குண்டடம் மேற்கு ஒன்றியம்	மானூர்பாளையம்
2.	மாலை 6.00	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	கோவிந்தாபுரம்
3.	இரவு 7.00	தாராபுரம் கிழக்கு ஒன்றியம்	மணக்கடவு
4.	இரவு 8.00	மூலனூர் மேற்கு ஒன்றியம்	கிளாங்குண்டல்

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

மதுராந்தகம் தொகுதி இ.பரந்தாமனை ஆதரித்து அச்சிறுபாக்கத்தில்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தேர்தல் பிரச்சாரம்!

எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் முன்னிலையில் டி.ஜெ.கோவிந்தராஜன் வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம், செப்.28- மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் தீட்டாளம் ஊராட்சியில் வாக்குச்சாவடி எண் 46க்கு உட்பட்ட குளக்கரை மேட் டுத் தெரு, யாதவர் தெரு, கோழியாளம் பிரதான சாலை பகுதிகளில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் முன்னிலையில், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

உடன் மு.மணிபாலன், எம்.எல். ரவி, மு. கதிரவன், எஸ். ரமேஷ், டி.ஜெ.

தமிழரசன், வாக்குச்சாவடி பாக எண். 46 நிர்வாகிகள் பி.கண்ணன் சி. விஸ்வநாதன், ஜெகத்ரட்சகன், செந்தில்குமார், வெங்கடேசன் பாண்டியன், மகேஷ், ரேணுகா, ரேவதி, சங்கரி, ரமேஷ், சக்திவேல், கும்மிடிப்பூண்டி மேற்கு, கும்மிடிப்பூண்டி பேரூர், மாவட்ட ஒன்றிய அணிகளின் பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, இராயபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் தா.இளைய அருணா, இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ சுரேஷ், வட்ட கழக செயலாளர் இரா.பாலன் எஸ்.புகழேந்தி, எம்.எல். ரவி, ஜெ.கௌரிஸ்வரன், கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



கழக இலக்கிய அணி சார்பில் மதுராந்தகத்தில் நடந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வில் பொருளாளர் நாகை சந்திரபாபு தலைமையில் அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் குப்புசாமி (எ) தம்பு, செம்பூண்டி சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம், கிளியாநகர் புகழ் நாராயணன் திருவெற்றியூர் அருள்தாஸ் , மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார், கத்திரிச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதி லிங்கம் , கிளை செயலாளர் ராமகிருஷ்ணன் மற்றும் கழக உறுப்பினர் ராஜா, முள்ளி குப்பம் கிளை செயலாளர் மூர்த்தி, வளர்பிறை சசிகலா, முள்ளி கிளை செயலாளர் சண்முகம் மற்றும் எத்திராஜ், தச்சூர், ரோட்ஸ் சகாயம், வேளாங்கண்ணி, ஜான், குன்னத்தூர், பத்மநாபன், வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொகாண்டனர்.

மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சியில்

ஆரம்ப சுகாதார மையத்தில் சுற்றித் திரியும் தெருநாய்கள்!

பொன்னேரி: மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகம் அருகே அரசு ஆரம்ப சுகாதார மையம் இயங்கி வருகிறது. இங்கு இப்பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு வார்டு பகுதிகளை சேர்ந்த ஏராளமான மக்கள் மற்றும் நாலூர், மேட்டுப்பாளையம், பட்டமந்திரி, மேலூர், சீமாபுரம், புதுப்பேடு, மவுத்தம்பேடு, செப்பாக்கம், அரியன்வாயல் உள்பட 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் என விபத்து, காய்ச்சல், சர்க்கரை நோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு நாள் தோறும் 100க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

இந்த ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் ஓபி சீட்டு, கட்டு கட்டும் இடம், மருந்து மாத்திரைகள் வாங்கும் இடம் உள்பட பல்வேறு மருத்துவ பரிசோதனைகளில் ஏராளமான நோயாளிகள் நீண்ட நேரம் காத்து கிடப்பதில் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். இதற்கிடையே, ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் ஏராளமான தெருநாய்களும் இங்கு மங்குமாக சுற்றி திரிகின்றன. இதனால் அங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் அச்சத்துடன் உள்ளனர்.

எனவே, மீஞ்சூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் போதுமான மருத்துவ பணியாளர்களை நியமிக்கவும், அங்கு சுற்றி திரியும் தெருநாய்களை பிடித்து செல்லவும், சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை நீண்ட நேரம் காக்க வைக்காமல் மருத்துவ பரிசோதனை, மருந்து மாத்திரைகள் வழங்குதல் உள்பட பல்வேறு மருத்துவ பணிகளை சீராக மேற்கொள்வதற்கு மாவட்ட சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் மெய்யூர் ஊராட்சி பகுதியில் மதுரவாயல் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வாக்கு சேகரித்தார். இதில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில், வட்ட கழக செயலாளர்கள் முகப்பேர் எம். எம். ஜெயரத்தினம், எம்.கே.பி.அண்ணாதாசன், பகுதி நிர்வாகிகள், ஆ.மாலினி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட பிரதிநிதிகள், எம்.சி.எழில்அரசு, ஆர்.ரசூல்தீன், மற்றும் டாக்டர் எம்.சி.அழகிரி, எம்.பி.நவராஜ், எம்.என். ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.எஸ்.ஜெயசிம்மன், எம்.பி.சீனிவாசன், எம்.சி.எஸ்.தமிழ் அழகன், எம்.பி.நவசுந்தர், எம்.எஸ்.கார்த்திக், எம் எம்.இமயவர்மன்,டி.அமுல்ராஜ், எம்.ஜி.எம்.புகழேந்தி, எம்.ஜி. விக்கி எஸ்.சபரி, எம்.பி.எழில், சுரேஷ் குமார் ஏ.ஷாம்,எஸ்.செம்மொழி,ராக்கி,அபி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மாமண்டூர் ஊராட்சி பாகம் 21 இல், 195 வது வட்டக் கழகச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் க.ஏகாம்பரம் முன்னிலையில் சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, 15 வது மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஜி.விஜயகுமார், மாமண்டூர் கிளைக் கழகச் செயலாளர் சீனிவாசன், குமார், ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

முதல் ஒருநாள் போட்டி:

இந்தியா அபார வெற்றி!

திருவனந்தபுரம், செப்.28- மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, மேற்கிந்தியத் தீவுகள் முதலில் விளையாடியது.

முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 295 ரன்கள் எடுத்தது.

296 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 41.4 ஓவர்களில் இலக்கை எட்டி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் முன்னிட்டு கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் மயிலை எஸ். முரளி முன்னிலையில் 171, 171 ஆ வது வட்ட நிர்வாகிகள் பகுதி பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதி மயிலை தென்றல் வி. விஜய் தலைமையில், பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர். இதில் மாமன்ற உறுப்பினர் ரேவதி, கீதா முரளி எம்.சி. மயிலை மா. பா. அன்பு, பகுதி பிரதிநிதி லயன் கே. காசி பாண்டியன், ஸ்டார் வி.குமார் பஞ்சர் கேமுருகன், சாஸ்தா எஸ். குமார், மாவட்ட பிரதிநிதி எழில், 171 ஆவது வட்ட துணைச் செயலாளர் கலை செல்வி, மகளிர் அணி கிரிஜா, சுசீலா ராணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.